# இஸ்லாமிய சிந்தனை



சிந்தனையாளன்
எம்.ஐ.மீராலெவ்வை

வெளியீடு: நன்னோக்கு மன்றம் - சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ABOUT THE AUTHOR

Mr. M. I. Meeraalebbai who hails from Sammanthurai is the third child of Mr. Uthumalebbepody Mohamed Sheriff and Mrs. Uthumalebbe Pathummah and was born on 16-12-32. He had his primary education at the Government Boys' School, Sammanthurai after which he joined the Wesley High School, Kalmunai for one year. He later proceeded to Methodist Central College, Batticaloa where he completed his secondary education. He has had a varied career during which he had been English Assistant Teacher and the Administrative Secretary at the M. P. C. S. Union, Sammanthurai. After a brief period in the Co-operative Movement his intellectual thrust once again lured him into the teaching profession.

He completed his professional training at the Palaly Teachers' College and is presently an English teacher on the staff of Sammanthurai Muslim Madhya Maha Vidyalayam and is also a Visiting Instructor in English at the Technical Institute, Sammanthurai.

— **Secretary,**
**Welfare Association,**
**Sammanthurai.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய சிந்தனை

84/05/03 - 6.35 PM.
at B'CO.
Railway
Station

சிந்தனையாளன்

எம். ஐ. மீராலெவ்வை

வெளியீடு இல. 01

**நன்னோக்கு மன்றம்**

**சம்மாந்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ISLAMIYA SINTHANAI

(THOUGHTS IN ISLAM)

BY

'SINTHANAIYALEN'

**M. I. MEERALEBBE**

SAMMANTHURAI-3.

FIRST EDITION [illegible]-2-1983.

PUBLISHED BY

**WELFARE ASSOCIATION**

(FOUNDED IN 1959)

SAMMANTHURAI.

PRINTERS

CATHOLIC PRESS, BATTICALOA.

COPY-RIGHT RESERVED.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

1. மட்டக்களப்பு நகர் மத்திய கல்லூரியிலே
ஆற்றல்மிகு ஆசிரியர்கள் அறிவொளி எனக்கூட்டி
அறிவுறும் மனிதனுய் உருவாக்கியதால்
ஆனவர்க்கும் அறிவூட்ட உதவியதே.

2. தெய்வப் பற்றில் வெற்றி கொள்ளத்
தெரிந்தவைகளைப் பாவுரைத்தேன்;
முஸ்லி மெனப் பேரை வைத்திராமல்
'முஃமீன்'[1] ஆவதென நாணுணர்ந்தேன்.

3. வையம் எவர்க்கும் சொந்தமில்லை
வாழும் மனித னெவனும் மடிந்திடுவான்
மெய்யாய் ஒருவன் வாழ்வானுனுல்
நல்வழி செல்வோன் அவனேதான்.

4. வையம் கண்ட அற்புதத்தை
வாழ்த்த வைத்த அல்லாஹ்வுக்கு
கோடி கோடி நன்றி யுரைப்போம்
கோடிபுகழ் அவன் சொந்தமே.

5. சமயம், சட்டம், அறிவெல்லாம்
சகலரும் சுபமாய் வாழ்வதற்கே
எங்கள் தூதர் உதித்ததாலே
எங்கும் சாந்தி நிலவியதே.

6. தான் தோன்றி என் போன்றவனை
உயர்த்திவிட உரமாய் உதவிய
ஷரிபுதீன் ஹாஜியார் அவர்களின்
ஆயுள் நீடிக்க இறஞ்சுகிறோம்.

---

1. முஃமீன் = விசுவாசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. யாத்த கவிதை நூலை அனுமதித்துக்
கருத்துரை, சாற்றுகவி, வாழ்த்துகவி
வாழ்த்துக்கள் வழங்கியோர்க்கும்,
அட்டைப்படம் வரைந்த
ஆசிரியர் றகுல் அவர்களுக்கும்
வழங்குகிறேன் என் நன்றிதனை.

8. தூயோன் மார்க்கத்தை விளக்குவதில்
தூய மறை பண்புகளைப் பாடுகிறேன்
அடியேன் பாடலிலே அரும்பிழைகள் வந்தாலும்
கூடிய குறைகளென்று கருதாதீர் கற்றவரே.

9. அழகாய் அச்சிட்ட அச்சகத்தார்க்கும்;
கேட்க உதவிமிகத் தந்தோர்க்கும்;
வெளியீட்டு விழாவுக்கு இடமளித்தோர்க்கும்;
வெற்றிகரமாய் விழா நடத்தினர்க்கும் என்நன்றி.

10. இத்துறைக்குப் பக்கபலமாய் இருந்து
இசையமைத்து இனிமையாய்ப் பாடிய
என் துணைவிக்கு இனிய நன்றிகள்பல
என்றும் இன்பம் எங்கும் பொங்குக.

11. இஸ்லாத்தில் கவிபாடும் காரியமோ
மார்க்கம் அனுமதிக் காததெனக் கூறுகிறார்
புழுகிப் புகழ்வதும் மொழிந்திடாது
மெய் உரைக்கிறேன் இனிய தமிழில்.

12. இத்துறையில் தேர்ச்சியான எவரும்
என்மேல் பொறுமை கொள்ளாது
இத்துறையில் இன்னும் உயர
உங்கள் உதவிகளைக் கேட்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இஸ்லாம் அனுமதித்ததையே
இலகு தமிழில் எடுத்துரைத்தேன்;
இப் பாநூலுக்கு 'இஸ்லாமிய சிந்தனை'
என்ற பெயர் பொருத்தம் என்றே.

14. இப் பாநூலுக்கு 'எனது சிந்தனை'
என்ற பெயர் வைப்பதைக் காட்டிலும்
'இஸ்லாமிய சிந்தனை' சிறந்த தென
எல்லோருக்கும் வழி காட்டுமது.

15. என்னருமைத் தந்தை யாசை நிறைவேற
அல்லாஹ்வுக்கே புகழாரம் என்றிதனை
வளரும் சந்ததிக்கு அறிவொளி யூட்டுமென
அற்பணித்தே னென்னருமைத் தந்தைக்கே.

சிந்தனையாளன்
எம். ஐ. மீராலெவ்வை

சம்மாந்துறை-3.
05-09-1982.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற

'புலவர்மணி'

**அல்-ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன்** ஜே. பி.

ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி

அவர்கள் அன்புடன் அளித்த

# கருத்துரை

1. சிந்தனையிற் தோன்றிவரும் செம்பொருளை மற்றவரும்
சிந்தனையிற் கொள்ளச் செயும்நோக்கில் - சிந்தனைகள்
என்னும் பெயரில் இயற்றியென் பார்வைக்குத்
தந்தனன்மீ ராலெவ்வை தான்.

2. ஆங்கிலத்தைப் போதிக்கும் ஆசிரியன் தன்னுணர்வைத்
தாங்கிய சிந்தனையைத் தந்துபிழை - நீங்கிவிடச்
செப்பஞ் செயச்சொன்னான் தீந்தமிழைக் கற்பதற்கு
ஒப்பி யெனைவந் தடைந்து.

3. புதுக்கவிதை யென்னப் பொருந்தும் இதனைக்
கதித்த முயற்சியென வேற்றேன் - எதிர்த்த
வழுக்களைந்து தந்தேன் வளர்சந் ததிகள்
இழுக்ககன்று வாழ நினைந்து.

புலவர்மணி

அல்-ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன்

மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற

'கவிஞர் திலகம்'

ஓய்வுபெற்ற அதிபர்

**A. அப்துல்காதர்லெப்பை**

அவர்கள் மகிழ்வுடன் வழங்கிய

# சாற்றுக்கவி

கவிஞன் மீரா லெவ்வையின் சிந்தனை
புவியி லுள்ளோர்க்குப் புகழாரம் என்பேன்,
குர்ஆன் திருமொழி நபிகள் பொன்மொழி
அரிதாய் மிடைந்த அன்னார் சிந்தனை
துடிப்பொடு விளங்கும், படிப்பவர் மனத்தில்
ஓயாச் சிந்தனை மாயாக் கருவெனத்
தனிநடை கொண்டு இனிய கருத்துகள்
பலவும் பரவி உலவும் கவிதை
தெள்ளெனத் தெரியும் ஒள்ளிய கருத்துகள்
கேட்பவர் மனதில் தாக்குத லின்றி
தெற்றென விளங்கும் அற்புத நடையில்
யாத்த கவிதை கோர்த்த இந்நூலை
போற்றுவீர் யாவரும் சாற்றுமித் தமியேன்
வாழ்த்துகள் என்றும் நிலைக்கவே வாழி.

கவிஞர் அப்துல்காதர்லெப்பை

50, ஆமன்கோணர்,
மட்டக்களப்பு.
3-5-82.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிம் பரம்பரையிலான 'நாயகப் புகழாரம்' நூலாசிரியரும்,
காத்தான்குடி மத்ரஸதுல் பலாஹ்வில்
விரிவுரையாளருமான

**மௌலவி எம். எச். எம். புஹாரி (பலாஹி)**

அவர்கள் ஆசியுடன் அளித்த

# வாழ்த்துக்கவி

சிந்தைக்கே விருந் தளிக்கும்
சிந்தையுறு கருத்தெல்லாம்
செந்தமிழிற் குழைந்தெடுத்து
'சிந்திப்பீர்' என விளித்துத்
தந்தாரிச் சோதரரும் !
தமிழ் மொழியில் இவர்செய்த
இந் நூலின் வசன கவி
எல்லோர்க்கும் அறிவூட்டும் !

உள்ளத்திற் கொளிவூட்டும்
உயர்வான போதனைகள்
கொள்ளுதற்குத் தகுதியுறும்
குளிர்ந்த வுயர் கருத்துக்கள்
தள்ளுதற்குத் தக்க தெனத்
தகையாளர் செப்பியவை
எல்லாமே கோத் தெடுத்து
எமக்களித்தார் இவ்வறிஞர்.

ஆங்கிலத்தைப் போதிக்கும்
ஆசிரியர் இவர் முயன்று
பாங்கான தமிழ் மொழியில்
பண்ணிய இப் பாநூலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்குகின்ற நம்மவரைத்
துள்ளி யெழச் செய்கின்ற
தீங்கருத்தும் தெள்ளுரையும்
நிறைந்திருக்கக் காண்கின்றோம்!

சிந்திக்கத் தூண்டுகிற
சிறப்பான கருத்தெடுத்துச்
சிந்தைக்கு விருந்தாகத்
தந்திருக்கும் ஆசிரியர்
செந்தமிழிற் பல நூல்கள்
சிறப்பாகப் படைத்தற்கு
நந்தலைவன் இறை, அருளை
நல்குதற்கு வேண்டுகிறேன்!

மௌலவி
எம். எச். எம். புஹாரி (பலாஹி)

''பைத்துல் பறக்காத்''
காத்தான்குடி-4.
15-03-1982.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல் ஆசிரியரான

## எம். பி. எம். ஜலீல்

அவர்கள் அன்புடன் வழங்கிய

# வாழ்த்துகள்

........................................................................................

........................................................................................

அந்த நபி நாயகத்தின்
அன் பொழுகும் வாக்கியங்கள்
பண்போங்கும் செயல் யாவும்
இன்றெங்கள் கவியவர்க்கு
கருவாகிக் கலையுலகில்
கவிச் சுரமாய்த் தொகுத்து இன்று
சீர் மங்கிப் போகு மிந்தச் சமுதாயச்
சிறப்பினுக் கோர் தூண்டுதலாய்
நபி மணியின் வாழ்க்கையினை
மறந்திருக்கும் மக்களுக்கு மனதார உரைக்கின்றார்.

மார்க்கமதை மறந்தலையும்
மக்கள் எங்கள் மத்தியிலே
கடமைகளை நினைவூட்ட
கவிச் சரமாய்ப் போதனைகள்
பல புரிந்த கவியவரின்
ஆசையெல்லாம் நபி மணியின்
பாதையிலே நாங்க ளெல்லாம்
பவனி வர வேண்டுவதே.

சமுதாயம் முழு வளர்ச்சி
கண்டடையும் நாளதுவே
கலைஞர்கள் முயற்சிக்கு
முழு வெற்றி கிடைக்கின்ற
நல்லதொரு தின மாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 'அல்லாஹ்வை'[1] நாம் தொழுதால்
எல்லாமே சித்தி பெறும்
வல்லோனே கேட்பவர்க்கு
வாரி அருள் வழங்கிடுவான்.

அல்லாஹ் எனச் சொல்வதிலே 2
அமைதி உண்டு வாழ்வினிலே
நல் வாழ்வைப் பேணிவரின்
நாயன் எல்லாம் உதவிடுவான்.

3 ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான்
அகிலத்தை அவன்தான் ஆள்கின்றான்
எங்கள் செயல்பற்றி விசாரிப்பான்
உரிய பயனைத் தந்திடுவான்.

ஆண்டவனைத் தொழுதிடுவோம் 4
ஹலாலாக[2] உழைத்திடுவோம்
வேண்டியோர்க் கீந்திடுவோம்
எளிமையாய் வாழ்ந்திடுவோம்.

5 ஆண்டவனை அணுகிடுவோம்
அவன் பாதை சென்றிடுவோம்
வீண் வம்பைத் தேடிவந்தால்
அவன் கட்சி சேரமாட்டோம்.

1. அல்லாஹ் = இறைவன்.
2. ஹலாலாக = ஆகுமானதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் படைப்புகளில் 6
அற்புதமான படைப்பாய்
பகுத்தறிவுடனான மனிதர்களாய்
பண்பாய் வாழப் படைத்தானே.

7 ஆலத்தைப் படைத்தவனை
அனுதினமும் அச்ச முற்றால்
சில வழி சென்றிடலாம்;
சிறந் தோங்கி வாழ்ந்திடலாம்.

ஆண்டவன் படைப்புகட்கு 8
அவன் கணக்கில் கொடுத்திடுங்கள்
ஈண்டு துயர் துடைத்தவர்க்கு
இன்னு மிகத் தருவானன்றோ !

9 அல்லாஹ்வின் சன்னிதியில்
அவன் அடியார் சங்கமமாய்
அருள் வாழ்வில் நிலைத்திடற்கு
இவ்வுலகில் வாழ்ந்திடுவோம்.

அல்லாஹ்வின் அருள் மறையை 10
அறிவூட்டும் அற நெறியாய்
அருமை நபி ஓதியதை
அனுதினமும் கடைப்பிடிப்போம்.

11 அனுதினமும் தொழுது கொண்டும்
அவன் அடியார் முகம் பார்த்தும்
அவன் கணக்கில் கொடுத்து வந்தால்
அருட் செல்வம் பெருகிடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் விதியென்று நாம் 12
அசையாமல் இருந்திடாது
விடா முயற்சியால் முன்னேற
விரைந் தெழுவோம் வாரீரே.

13 அரசியல் கட்சியை யமைத்திடலாம்
ஆண்டுதோறும் கட்சிபல மாறிடலாம்
அல்லாஹ்வின் கட்சியை சேர்ந்திடுகில்
அருள்மறையின் சரத்துப்படி வாழணுமே.

இலகுவழி இஸ்லாம் என்னும் 14
இன் வாழ்வை அமைத்துத்தந்த
இறைதூதர் நபி பிரானை
இதயத்தில் நினைவு கூர்வோம்.

15 அண்ணல் நபி போதித்த
அல்லாஹ்வின் வேதம்போல்
அரிய வோர் இலக்கியநூல்
ஏனைய மொழியில் இல்லையே.

அண்ணல் நபி போதித்த 16
அல்லாஹ்வின் அருள் மறையை
அனுதினமும் கடைப்பிடித்து
அல்லாஹ்வின் அருள் பெறுவோம்.

---

1. ஹதீது — நபி மொழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 அண்ணல் நபி மணியின்
அரிய 'ஹதீது'[1] களை
அனைவரும் நம்பிக்கையுடன்
அணுகினால் அருள் பெறுவோம்.

அற்புதப் போதனைகளை 18
அண்ணல் பெருமானார்
அன்போடு எடுத்துக்கூறி
ஆன்மாக்களை ஈடேற்றினார்.

19 அதிகாலை விழித்தெழுந்து
ஆண்டவனைத் தொழுதபின்னர்
அந்நாட் காரியங்களை
ஆரம்பித்தலால் பெரு லாபமுண்டு.

ஆண்டவனைக் கேட்டிடுங்கள் 20
அவனே அள்ளிக் கொடுக்கும்
கருணை உள்ளம் படைத்தவனே
காலமெல்லாம் இரங்கிடுவான்.

21 ஆயிர மாயிரந் தெய்வங்களை
அனுதினமும் வழிபட்டோரை
ஓரிறைவனை வணங்கிட
ஓதினார் தீனுல் இஸ்லாத்[1]தை.

---

1. இஸ்லாம் = சாந்திமார்க்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுருவாய் அன்புருவாய் 22
அகிலத்தில் இருளோட்டிய
அண்ணல் பெருமான்
அகல் விளக்காய் இருந்தனரே.

23 அரேபியா வெங்கனும் வலைவிரித்தார்
அண்ணல் நன்னபி நாயகரை
அழித்துப் புதைத்திட வேண்டுமென
அல்லாஹ் காத்தான் அவன் நபியை.

அக்கிரமம் பல இழைத்தவர்க்கும் 24
அநியாயக் கொலை செய்தோர்க்கும்
நெறி நல வாழ்வினைக் காண்பித்து
நேர்மை வழியைக் காட்டினரே.

25 ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்து
மாட்சிமை மிகு மன்னவராய்
நீதிநெறி தவறாது நிலத்தினிலே
நேர்மை ஆட்சியை நிறுவினரே.

அண்ணல் நபி நாயகம்தான் 26
சர்வாதிகாரியா யில்லாது
மக்களை நீதிமுறையில் ஆண்டு
அன்பினைப் பொழிந்தனரே.

27 அழகு கதீஜாவின் பொருளுக்கு
அதிபதியானாலும் அணுவளவேனும்
ஆடம்பர மில்லாத வாழ்வாய்
அனைவரையும் அணைத்து வாழ்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் நினைவே ஆன நேரமும் 28
ஆத்திர மென்றதை அவ ரறியார்
அன்பினைப் பொழிந்திடும் அருளுருவாய்
அவனைத் தொழுதலே அவர் தொழிலாம்.

29 ஆண்டி அரசன் வேற்றுமையை
ஆணித்தரமாய் அறுத் தெறிய
ஆண்டவன் அருளிய தாலே
அனைவரும் சமமெனக் கொள்வாயே.

அண்ணல் பெருமானின் 30
அடக்கஸ் தலத்தினிலே
வீசும் அற்புத நறுமணமே
அல்லாஹ்வின் அருள் மணமே.

31 ஆண்டி யரசன் எவரானாலும்
அல்லாஹ்வை வணங்காதோர்
இஸ்லாம் எனும் கட்டடத்தை
இடித்தவராய் ஆவாரே.

அந்தக் கால அறபியர்கள் 32
அழகுறு பெண் சிசுக்களை
ஆழக் குழியினுட் தள்ளி
அநியாயக் கொலை செய்தார்.

33 அத்தகைய கொலைத் தொழிலை
ஆகாது பாவமென விலக்கி
உத்தமர்களா யாக்கிய
உயர் பண்பின் நாயகமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமாய் அவதரித்தார் 34
அண்ணல் நபி நாயகமே
அன்னவர் நாமம் சூட்டி
அழைத்திடுவோம் குழந்தைகளை.

35 'அல்அமீ'[1] னென்னும்
நற்பேர் கொண்ட நாயகமே
உண்மை உரைப்பதிலே
உத்தமராய் வாழ்ந்தார்கள்.

அமைதி குலைய உலகினிலே 36
அவரவர், சுய நலத்தால்
ஆலத்தில்[2] அழிவை ஏற்படுத்தி
அல்லல் விளைப்பார் கயவர்களே.

37 ஆகாயம் வாழ் பறப்பவையும்
ஆழ்நீர் வாழ் மீனினத்தையும்
உணவூட்டி வாழ வைப்போன்
மானிடரை உழைத்து உண்ணவைத்தானே.

அல்லாஹ்வின் அறக் கட்டளைக்கு 38
அடிபணிந்து நடப்பவர்களே
எல்லாம் வல்லவன் ஈடேற்றத்தை
இருமையிலும் அடைந்து இன்புறுவர்.

1. அல் அமீன் = நம்பிக்கையானவர்.
2. ஆலத்தில் = உலகத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39 அன்று கூறுவதும் அதேவழி
இன்று கூறுவதும் அதேவழி
என்றும் கூறுவதும் அதேவழி
இறைவன் ஈந்த அருள்வழி.

அரசுக்கு வருவாயை குறைத்துக் கூறிடலாம் 40
அடியோடு முழு வருமானத்தையும் மறைத்திடலாம்
இறைமறை வகுத்த சக்காத்[1]தை ஈயாதோர்
இறையிட மிருந்து தப்பிக்க முடியாதே.

41 அறிவாளி ஆகணு மென்று
ஆயிரம் புத்தகங்களைக் கற்றாலும்
கட்டைக்குக் காலால் அடித்துவிட்டுக்
கட்டை அடித்து விட்டதென்பாரே.

அன்பைக் காட்டி அறத்தைப் பேணி 42
அவ னுரைப்படி வாழ்ந்தால்
அவனியிலே சகோதரத்துவமாய்
ஒற்றுமையோடு வாழ்ந்திடலாம்.

43 இறைவன் அருளிய போதனையாம்
திருக்குர்ஆன்[2] வேத நூலை
நாவினால் நவிலும்போதும் – செவியினால்
செவியுறும் போதெல்லாம் நன்மையுண்டே.

---

1. சக்காத் = செல்வ வரி.
2. திருக்குர்ஆன் = தெய்வீக வாக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகு வழி இஸ்லாம் என்னும் 44
இன் வாழ்வை அமைத்துத் தந்த
இறை தூதர் நபி பிரானை
இதயத்தில் நினைவு கூர்வோம்.

45 இறை தூதர் நபி பெருமானார்
எந்தக் கல்விக் கூடத்திலும் கற்றுப்
பட்டம் பதவி பெற்றிடாது
பாரில் மதம் போதித்துள்ளாரே.

இறை தூதர் மொழிவழியே 46
இறைவனது கட்டளையாம்
சீமான்கள் சக்காத்தை
சேகரித்துப் பங்கிடவே.

47 இறைவன் தூதுகொண்டு
இவ்வுலகில் தியாகஞ்செய்து
இயற்கை நெறிமுறையை
எடுத்தோதினார் எம்பெருமான்.

இஸ்லாத்தின் ஐம்பெருங் கடமை 48
கலிமா[1], தொழுகை[2], சக்காத், நோன்பு[3], ஹஜ்ஜை[4]
இவ்வுலகில் வாழ்வோர் நம்பிட்டாலே
இகமெலாம் இஸ்லாம் பரந்திடுமே,

---

1. கலிமா = இஸ்லாத்தின் மூலதார வாக்கியம்.
2. தொழுகை = வணக்கம்.
3. நோன்பு = விரதம்.
4. ஹஜ் = மக்கமா நகர் சென்று செய்யும் இறுதிக் கடமை.
5. ஈமான் = நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49 இஸ்லாத்தின் கொள்கைகளை
நியமமாய்ச் செய்துகொண்டு
ஈமானின் பண்புகளை
இதயத்தில் நிலை நிறுத்து.

இறைவனைத் தொழுதிடுவோம் 50
இகமெலாம் வாழ்ந்திடுவோம்
தர்மத்தைச் செய்திடுவோம்
தார்மீகம் தரித்திடுவோம்.

51 இஸ்லாமியரெவரும் இரத்த பாசத்தால்
ஒன்றிணைந்த சகோதரர் களாகவே
முழக்கத் 'தக்பீர்'[1] முழங்கிடச் செய்தால்
உண்மை சகோதரத்துவம் ஓங்கிடுமே.

இரண்டுமனமாய் இருந்திடு மனிதா 52
இறைவனைத் தொழுது இறைஞ்சுவதுடனே
அவனது அடியார் துயர் துடைத்து
அவனது அருளைப் பெறுவாயே.

53 இவ்வுலகம் உனக்குச் சொந்த மில்லை
உற்றார் உறவினர் கூட வரார்
நீர்செய்யும் நற் செயல் மட்டுமே
நீ இறந்தால் உன் கூடவரும்.

1. தக்பீர் = அல்லாஹ்வை பெருமைப்படுத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றார் பெற்றார் என்று சொல்லும் 54
உறவின ரெல்லாம் உன் னுடலின்
சற்றே காற்றுப் பிரிந்து விட்டால்
சிறிதும் உதவ வருவாரோ

55 இஸ்லாமிய சமுதாயத்தை
ஸ்தாபித்த எம் பெருமான்
போதனைகளைப் பேணிவரின்
ஆண்டவனின் அருள் பெறலாம்

இருள் சூழ்ந்த இவ்வுலகுக்கு 56
இறை யளித்த அருட் கொடையாய்
எம் பெருமான் வந்துதித்து
இறை மறையைத் தந்தனரே.

57 இறைவ னழைப்பின் படி
எம்பெருமான் 'புறுக்'[1] கென்ற
சிறை பரியில் விண் ணுலகில்
சென் றிறையைச் சந்தித்தாரே

இறைவனைத் தரிசித்த நாதருக்கு 58
ஈந்த அருட் கொடையாய்
ஐந் நேரத் தொழுகையை
அன்புடன் அருளினனே.

1. புறுக் = நபிகளின் மிஃறாஜ் வாகனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59 இறைவன் தந்த எழில் மதியாம்
இகத்தில் இலங்கும் ஒளி விளக்காம்
அருளைப் பொழியும் அன்புரு வாய்
அல்லாஹ்றவின் நண்பர் வந்துதித்தார்.

இனிய வாழ்வுக்கு வழிகாட்டி 60
ஏழை மாந்தருக் கறி வூட்டி
மனித மாணிக்க மாய்த் திகழ்ந்த
மா நபி வாழ்வை மனங் கொளுவாய்.

61 இம்மை மறுமையின் பயன் காண
இறையோன் பாதையில் வழிகாட்டி.
அனைவரும் அவன் சன்னதியடைய
அண்ணல் நபி துணையா யினரே.

இறைவா ! எம் இரக்க முள்ள 62
இரட்சகனே எம் பாவங்களை
மன்னிப்பாய்; மனம் போனபோக்கில்
போகாது எமைக் காத்திடுவாயே.

63 இறுதி நபியா யிவ்வுலகில்
இறைவனின் இறுதி மார்க்கத்தை
நிறுதிய வெங்கள் நபியை
நினைந்து ஸலவாத்[1] தோதிடுவோம்.

1. ஸலவாத் = இறைதூதர் (ஸல்) அவர்கள்மீது ஓதும் பிராத்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை பக்தி உள்ளவர்க்கே 64
இம்மை மறுமை இரண்டினிலும்
இறைவன் அருள் தந்து
இலகுவாய்க் கரை சேர்ப்பான்

65 இன பந்துகட்கு ஈந்தவர்க்கு
இரட்டைத் தவா[1] புண்டு
இறைவன் அருள்வான் என்று
ஏந்தல் நபி மொழிந்தனரே.

இதயத்தில் இறைவனை நினைக்காதவனே 66
இறைவ னிடத்தில் அருளைப்பெற முடியாதே
ஏழைக்கு ஈவு இரக்கம் இல்லாதவனோடு
இறைவனும் இரக்க முள்ளவனாய் இரானே.

67 இரந் துண்ணுவது இழிவு என்னும்
இஸ்லாம் ஸக்காத்[2]தை ஏனோ தான்
கட்டாயக் கடனாக்கியதை
உணர்ந்திட்டால் உத்தமன் ஆவோம்.

இறை தூதர் வேதம் மதித்தும் 68
வானவர் மறுமை உண்மை யென்றும்
நம்பிக்கையாய் மட்டு மின்றி
வாழ்வையும் நம்பிக்கையாய் வாழனும்.

---

1. தவாபு = நல்ல பலன் பெறுதல்.
2. ஸகாத் = செல்வ வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69 இஸ்லாமிய சிந்தனையில்
எடுத்துரைக்கும் நற் கருத்தை
எல்லோரும் ஏற்பாராணுல்
எம் சமுகம் நலம் பெறுமே.

ஈருலக நலன் பேண 70
ஈமானில் உறுதிகொண்டோர்
இஸ்லாத்தின் நெறி முறையாய்
இவ்வுலகில் அருள் பெறுவார்.

71 ஈ விரக்க மில்லாத மனமுடை யோர்
ஈ மானில்லாத மானிடராவார்
ஈ விரக்கமுடன் வாழ்ந்தால்
ஈ ருலக வாழ்விலும் வெற்றிபெறுவீர்.

ஈ மானை முழுமையாகக் கடைப்பிடிப்போர் 72
இவ்வுலகும் அவ னருள் கொண்டு
இப்புவியில் வாழ்ந்திருக்கும் வரை
இறை அருள் இறங்கிக் கொண்டிருக்குமே.

73 ஈருலக மறை யுரைத்த
அருமை நபி அனைவரையும்
அல்லாஹ்வின் சன்னிதியில்
அடைவித்துக் காத்திடுவார்

இறை பக்தி வளர்ச்சியுடன் 74
இறையைத் தொழும் நேரத்தில்
இப்லீஸ்[1] குறுக் கிட்டு
எண்ணம் பாழ்பட லாமோ.

---

1. இப்லீஸ் = சாத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75 ஈமானில் உறுதி கொண்டோர்
இறை தொழுகை வெற்றி கொண்டு
இப்லீஸின் குண பாட்டில்
என்றும் விலகி யிருப்பாரே.

தொழும் நேரந்தனில் கல்பை[1] 76
துப்புரவாய் நிலைப் படுத்தி
வீண் எண்ணம் வாராது
வெற்றி கொள்ள வேண்டுமரோ

77 அனுதினமும் இறைவனைத் தொழுது
அவன் நினைவாய் இருப்போரை
இப்லீஸால் கெடுக்க வொண்ணு
ஏங்கித் தவிப்பான் அவனன்றே.

ஈமான் கொள் இறை மலக்கு[2] 78
இயல் மறைகள் நபிமார்கள்
ஆமாம் மறுமை நன்மை தீமை
அவன் பக்கல் என்றுணர்ந்தே.

79 இஸ்லாமிய வரித் திட்டம்
அரசியலில் புதுமை ஒன்றே
பொருளாதார நெறி யதற்கு
உறுதுணை யாம் சக்காத்தே.

---

1. கல்பை = உள்ளத்தை.
2. மலக்கு = வானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் பொருள் படைத்த மக்கள் 80
கொடுத்தல் கடன் சக்காத்தை
வருடாந்தம் வழங்கா தோர்
பிறர் பொருளை அபகரித்தார்.

81 மரணித்த பின் அவர்க்காய்
ஊரார் தெரியக் கொடுத்து
மறை யோதிக்கை யேந்தியும்
பலன் ஏது மிருக்காதே.

வருட மொரு நிகழ்ச்சியாக 82
வசதி யுள்ளோர்க் குண வளித்து
எச்சம் ஏழை உண்ண வைத்தால்
என்ன பயன் உண்டாமோ.

83 இஸ்லாம் விதித்துள்ள
ஸதக்கா[1] ஸக்காத்[2]தாக
நல்முறை இருவகையாய்
கொடுத் துதவக் கட்டளையாம்.

இறை வகுத்த சக்காத்தை வழங்காது 84
தான் விரும்பும் தானங்கள் எத்தனைதான்
செய்து நல் பேர் ஓங்கினாலும்
இறைவனிடம் ஏதும் பலன் கிடைக்காதே.

---

1. ஸதக்கா = தர்மம். 2. ஸக்காத் = செல்வவரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85 தின மைந்து வேளையிலே
பறுளைத் தொழா திருந்து
சுன்னத்து[1] எத்தனை தான்
தொழுதாலும் பல னில்லை.

இடக் கைக்குத் தெரிந்திடாது 86
வலக் கை கொடை கொடுத்தல்
வாங்குபவர் மானங் காத்து
வுண்மை யுறும் சதக்கா வாகும்.

87 ஏழைகளை வாழ் விக்க
இறை வகுத்த சக்காத்தை
இஸ்லாத்தின் கடமை யென
எடுத்தோதி யுள்ளா ரே.

பொருளை விரும் பாய் மனிதா 88
புகழால் மகிழாய் மனிதா
அன்போடு அயலவர் பட்ட
துன்பத்துக் குதவுவாய் மனிதா

89 தன் செல்வம் கொண்டு - பொது
நலம் பயந் தற்காய் அரிய
சேவைகளைச் செய்திட லால்
மறுமைஇறை யருள் பெறுவாயே.

1. சுன்னத்து = மேலதிக வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருடனே ஓர் சதமும் 90
கொடுத்த கொடை நானிலத்தில்
உயர்ந்த சதக்காவாய்
ஏற்றிடுவானிறையவனே.

91 இறந்த பின் அவருக்காய்
எவர் வாரிக் கொடுப்பதிலும்
உயிருடனே அவர் கொடுத்த
ஒரு சதமும் உயர் கொடையே.

தலை காக்கும் தர்மத்தைத் 92
தயாள உள்ளத் தோடு
கொடுக்கும் பணி யிருந்தால்
கொடிய ''பலாய்''[1] நீங்கிடுமே.

93 சக்காத் வசூல் திட்டத்தைச்
சரிவர அமுலாக்கினாலே
வறுமையில் வாழும் குடும்பங்கள்
வாட்டம் தவிர்ந் தோங்குமே.

சக்காத் வரிச் சட்டத்தை 94
நவீன பொருளாதார உலகின்
பொருத்தமான வரிச்சட்டமாய்
திட்டமிட்ட நபிநாயகரைப் புகழுவோமே.

1. ''பலாய்'' — நோய் நொம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95 சம்மாந்துறை என் தாயகத்தினிலே
சக்காத் குழு வோர் செய்திடவேண்டும்
செம்மை சான்ற கைங் கரியத்தின்
வேலைத் திட்டத்தை தந்துதவுகிறேன்.

வயலில் விளைந்த நெல்லின் சக்காத்தை 96
களவெட்டியிலே ஒன்று திரட்டி
விற்பனை செய்து வந்த பணத்தை
வங்கியில் வைப்பாய் வைத்திடவேண்டும்.

97 சக்காத் நிதியின் வங்கிக் கணக்கை
ஊருக் கொன்றாய் அமைத் தெவரேனும்
பாதித்திடாமல் தொழிலாளர்களை
வேலைக்கமர்த்தி வேதனம் கொடுப்போம்.

தொழிலுக்கு வழியைக் காட்டித் 98
தொல்லை யிலா வாழ்வைக் காட்டிச்
செய்திடும் நற்சேவை யெலாம்
சிறப்பா யமையும் சமூகத்துக்கே.

99 ஆற்றோரத்தில் அமைந்த வயல்களை
குறைந்த தொழுகைக்குக் குத்தகை கொடுத்து
நீர் இறைக்கும் 'பம்பால்' நீர்ப் பாய்ச்சி
பயறு இனப் பயிர்களைப் பயிரிடலாம்.

வயதான குமரிகளை வாழ் விக்கவும் 100
வாழ் விழந்த பெண்களை வாழ் விக்கவும்
கைத்தொழில் நிலையங்களை அமைத்துத்
தொழில் வாய்ப்புக் கொடுத்திடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101 சட்டிபானை செய்யப் பன்னவேலை செய்ய
வீடி சுருட்டுச்சுற்ற; உணவு தயாரிக்க
நெசவுத் தொழில் செய்யப் பயிற்சியளித்து
தொழிலில் அமர்த்தத் திட்டம் அமைப்போம்.

நெல்குத்தும் தொழிலாய் உள்ளோர்க்கு 102
நெல்குத்தும் தொழிற்சாலையை அமைத்து
வெளி இடங்களுக்கு ஏற்றிவிற்கும்
தொழில் கொடுத்து வாழவைப் போம்.

103 இல்லற வாழ்க்கையில்
இறங்கும் ஆண்க ளெல்லாம்
பெண்ணுக்கு மகர்[1] கொடுத்தே
மணவாழ்வு கொடுத்திடணும்

போது மான வருவாய் 104
இல்லா தோர் இவ்வுலகில்
இல்லற வாழ்வு தனில்
இயங்குவது மதி யீனம்

105 போது மான வருவா யிலாது
பெண்ணைத் துணைவியா யெடுத்து
கஷ்டத்திலே வைத்திடுதல்
கன பாவம் காணுங்களே.

---

1. மகர் — கணவன் மனைவிக்குக் கொடுக்கும் கட்டணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையின் கொடுமை யாலே 106
வழிதவறும் சமூகத்தினரை
வாழ வழிவகை தந்து
வளமா யினி யமைந்திடுவோம்.

107 எம் பெருமான் போதனைகளை
இவ் வுலகம் பேணு விட்டால்
இன ஒற்றுமை சகோதரத்துவத்திற்கு
இடமே இராது இனங்களிடையே.

எம் பெருமான் போதித்த 108
புறுகான்[1] எனும் வேதம்
இறுதி வேதமா யிருக்க
இறைவன் அனுப்பினனே.

109 எங்கள் நபியை ஈன்றெடுத்த
பெருமை மிகுபெண் குலத்தின்
அன்னை ஆமினு அவரை
வாழ்த்தி மனமார மகிழ்ந்திடுவோம்.

அல்லாஹ்வைத் தொழும்படி உங்கள் 110
அருமைக் குழந்தைகளை நீங்கள்
சொல்லிப் பழக்கிடுங்கள் என்று
சொன்னார்கள் அண்ணல்நபி அன்று.

---

1. புறுகான் = தீயதை விட்டும் நன்மையைப் பிரிந்தரிதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

111 ஏழ்மை வாழ்க்கையே பெருமை யென
இதயம் விரும்பி ஏழ்மையோடு
எல்லாம் வல்ல இறை யவனை
இறைஞ்சித் துதித்து வாழ்ந்திடுவோம்.

எம்பெருமான் வாய் மொழிந்தனர் 112
இசை வாய்க் கேட்பர் தோழர்களே
விறகை நெருப்புத் தின்பதுபோல்
பொறாமை தன்மைகளை தின்றிடுமே.

113 உன் கடமையைச் செய்திடு
நேர்மைக்கு உதாரண மாயிரு
தினமும் பாக்கியே யின்றிச் செய்
தியாகி யென்றுனை ஏற்றிடுவார்.

உற்றார் பெற்றார் என்று சொலும் 114
உறவின ரெல்லாம் பூமி யிலே
சற்றே உயிர் பிரிந்திட்டால்
சடலத்தை மண்ணுள் புதைத்திடுவார்.

115 உண்மையைக் கடைப் பிடித்து
உரைத் திட்ட நாயகத்தின்
உறுதி மொழி இவ் வுலகில்
உணர்ந்தே உரை யாடிடுவோம்.

உண்மை மார்க்க மதை 116
உரைப் பதற்கு உம்மி[1] நபி
உறுதியான நெஞ்சமுடன்
உடையோன் தூதை ஓதினரே.

---

1. உம்மி = எழுத வாசிக்கத் தெரியாதவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

117 உல கிருளைப் போக்கிட
உத்தம நபியாய் வந்துதித்த
எங்கள் இறைசூல் நாயகமே
ஒளி கொடுத்தார் மானிலத்தில்

உன்னத செயல்களால் உயர்வுபெற 118
உங்கள் பிள்ளைகட் கெடுத்துக் கூறி
நலமான சேவைகளைக் செய்திடவே
நல்லது செய்வீர் நானிலத்தே.

119 உழைப்பால் உயர்வதை மெச்சியவர்
உழைத்து உண்பதே சிறந்த தென்று
பிறரின் உழைப்பில் பங்குகொளல்
பிழையான செயலென் றுரைத்தாரே.

உழைத்தலே ஜீவனோ பாயம் 120
உயர்ந்த தெனும் நபி மணிகள்
உழைப்பால் உயர்வதையே
உம்மத்தார்க்கு உணர்த்தினரே.

121 ஊருக்கு உபதேசம் செய்திடுவார்
உண்மை மொழிகளைப் போதித்திடுவார்
வஞ்சம் பொய் பேசுதல் அவர்களது
வழமையான பொழுது போக்கே.

உண்மையாய் நடந்திடுவோம் 122
உயிரினங்களைக் காத்திடுவோம்
உண்மை தவறி நடந் திட்டால்
உயிரிழந்த மரமாய்ப் போவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

123 உலக நீதி மன்றத்திலே
உரைத்த சாட்சியங் கொண்டு
தீர்ப்பு வழங்கப் படுவதானால்
பொய்ச் சாட்சியும் புகன்றிடுவாரே.

பொய்யான தீர்ப்புக் கொண்டே 124
மேலோன் நீதி மன்றத்தில்
கண் ணுற்ற சாட்சி கொண்டு
அவனே தீர்ப்பை யளித்திடுவான்

125 உன்னையே வேண்டிடினும்
உனக்காகவே அனுதினமும்
தொழுது மக்கள் பாவங்களை
மன்னித் தழை உன் சன்னிதிக்கு

உருவச் சிலைகளை யாக்கி வைத்து 126
வணங்கிட்ட அத் தெய்வங்களை
உடைத் தெறிந்து உண்மையான
மார்க்கத்தை உபதேசித்தனரே.

127 இதய மற்ற இறைவ னென
அல்லாஹ்வை நிந்தித்தவர்
இறந்த பின்னர் ஆகிறத்தில்
அவனிடம் தான் போகணுமே.

ஆகிறத்தின் சுவனபதி 128
யாருடைய தென் றறியாமல்
வாய்க்கு வந்தபடி சொற்களை வீசி
வசை மாரியாய் பேசலாகாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

129 உனது கணவன் உபாத்தாகிடலாம்
உனது மைந்தனும் மௌத்தாகிடலாம்
அதற்காய் அல்லாஹ்வை நிந்திப் பாயோ
அனைவரும் ஒருநாள் இறப்பது நிசமே.

உயர்ந்த நெறியின் ஒளிக்கதிரே 130
ஒப்பார் என்போர் யாரும் இல்லை
அன்பிற் பண்பினிற் திகழ் பவரே
அகிலம்[1] என்றும் உமை நினைக்கும்

131 ஓர் இறை உண்மையைத் தந்த வரை
உருவத் தொழும் பரை ஒழித்த வரை
நேர்மை நெறிகளை உரைத்த வரை
நினைந்து நினைந்து புகழ்ந்திடுவோம்

உதவாப் பிள்ளைகளாய் வளர்ந்தவர்கள் 132
செய்திடும் நாசச் செயல் கட்குப்
பெற்றோர் மட்டும் பொறுப் பன்றிச்
செல்வந்தரையும் அது சார்ந்திடுமே.

133 உண்மையான அன்பினோடு
உப்பில்லா உண வூட்டினாலும்
உண்மையான உப சரிப்பால்
உள்ளங்கள் குளிர்ந்திடுமே.

---

1. அகிலம் = உலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை நீ மற்றோரிடம் 134
நம்ப நடந்து கொண்டால்
நம்பிக்கையால் இவ்வுலகம்
நன் மதிப்பு வைத்திடுமே.

135 உன் இதயத்தில் ஓர் இறைவனை
நிலைத்து நினைந்து வாழ்ந்திடுவாய்
இறைவனைத் தொழும் இடம் போனாலும்
இறைவனே உன்னுடன் இருக்கின்றான்.

உண்மை அறிந்து விசு வாசித்து 136
ஒருவர் இஸ்லாம் தழுவலை யேல்
எண்ணம் அவர் தன்மத மாற்றம்
ஏதும் நன்மை அளிக்காதே.

137 ஹிறுக்[1] குகையில் தவம் செய்து
இறைவனிடம் அருள் பெற்று
இறைவனது போதனையை
எம் பெருமான் எடுத்து ரைத்தார்.

ஐம் பெருந் தத்துவங்களை 138
அருளும் அரிய இஸ்லாம்
அதின் ஆரம்ப தத்துவமே
ஏகத்து வத்தை நம்புவதாம்

1. ஹிறுக் — நபி (ஸல்) அவர்கள் தவம்புரிந்த மலையின் பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

139 தின மைந்து நேரம்
இறையோனை தொழு திடுதல்
படைத்தவன் கூலிக் கன்று
பாவம் நாம் தவிர்த்தலுக்கே.

தினமும் கோழி கூவுங்கால் 140
காகம் கரை சாமம்
நா மெழுந்து தொழுகையோடு
நாளை ஆரம்ப மாக்கிடுவோம்.

141 இறைவனைத் தொழுதிடுவார் பிறர்
எவரையும் தொழச் சொல்லிடுவார்
பொய் பொறாமை கொள்ளுமவர்
தொழுகை யிலென்ன பயனுமோ.

நாள் தோறும் தொழுதிடுவோம் 142
நாயனிடம் கேட்டிடுவோம்
தீமைகளை விட்டிடு வோம்
தீனுக்காய் உழைத்திடுவோம்.

143 நாள் தோறும் முயன்றிடுவோம்
நல்ல தொழில் செய்திடுவோம்
நலிந்த வர்க்கு வழங்கிடுவோம்
நாயகத்தின் வழிநடப்போம்

தொழுகை தனை நிறை வேற்ற 144
ஆண்டி அரசன் பேத மில்லை
செலவுகளோ எதுவு மின்றிச்
செய்திடவே கடமை யென்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

145 படைத்தவ னிடம் பணிந்து
பாவ மெல்லாம் எடுத்துரைத்தால்
திடனுக அருள் கொண்டு
மன்னிப்பான் எம்மை யெல்லாம்.

படைத்தவனைக் கேட்டிடு வோம் 146
பாவங்களை உரைத்திடுவோம்
மன்னிக்கும் மன முடையோன்
மன்னிப்பான் கேட் போரை

147 ஹிருக் குகையில் தனித்திருந்து
இறை தவம் செய்கையிலே
உலகின் மானிடரை உய்விக்க
ஓத வைத்தான் திருமறையை.

ஓதும் மறையினைத் தாங்கிவந்த 148
உண்மைத் தூதரை வயிற்றினிலே
சீதமதி வதனக் குழவியாய்ப்
பெற் றெடுத்த அன்னையைப் புகழுவோமே.

149 விரும்பி உதவிகளைச் செய் வோர்க்கே
ஏக இறைதுணை கிட்டு மென்க
பாவம் ஏதும் செய்யா தோர்
பயந்து வாழத் தேவை யில்லை.

எதிரியைக் கண் டொழித் திடலாம் 150
கடன் காரனை எதிராமல் போ யிடலாம்
இஸ்ருயீ[1]லைத் தப்பித்து விடல்
எவராலும் முடியாத காரியமே.

---

1. இஸ்ருயில் = உயிரை எடுக்கும் அமரரின் பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் துளிர்த்து வளர்ந்தாலும் 151
மண்ணாகும் உதிர்ந்தவுடன்
இதில் புதுமை ஒன்றுமில்லை
யுலகியல்பே உணர்ந்துவிடு.

152 பெருமையோடு வாழ்ந்தாலும்
பின்னொருநாள் மண் மறைவர்
இறக்கமுன்னே இங்கு செய்த
நன்மைகள்தான் கூடவரும்.

மாடிவீட்டு வாழ்க்கையெலாம் 153
மறைந்துவிடும் இம்மையினிலே
நம் கதியை மதித்து நடந்தால்
நமனைப் பயந்து ஓடவேண்டாம்.

154 வையம் புகழும் மனிதா உன்
வாழ்வோ சிறிது வாழ்விங்கு
பொய்யாம் இந்த ஞாலமதில்
பொங்கி இன்பம் மயங்காதே.

தேடிக் கொண்ட செல்வமெல்லாம் 155
ஆட்டம் நின்று அமர்ந்திட்டால்
தெருவிற் போட்ட குப்பையென
எள்ளி நகைப்பார் உண்மையிதே.

156 ஐயோ மலரே காற்றினிலே
ஆடி நின்றாய் நறுவாடை
உன்தன் இதழ்கள் சிதறிப்போய்
செத்து மடிவது உன்விதியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது சொன்ன வாழ்நாளும் 157
குறைந்து போகக் காண்பீரே
ஆடித் திரியும் காலமதை
மீண்டும் பெறவும் மாட்டோமே.

158 பொல்லா உலகம் என்பீரே
புகுந்தது பிழைதான் என்பீரே
நல்லாய் வாழ்வை யமைத்திட்டால்
நாளும் நலமாய்ப் போயிடுமே.

நாளை நாளை யென்றிருந்தால் 159
நமனும் உம்மைத் தொடரானே
இன்றே இறையைத் தொழ எழுவாய்
நன்றே யாவும் தருவானே.

160 பாலை விரித்த வாழையது
பருவம் என்றே அறியீரோ
வாழ்வை யதுபோல் அமைத்திட்டு
வளமாய்க் கொண்டு வாழ்வோமே.

மக்களைப் பெற்று வளர்த்தவனே 161
மண்ணின் அடியில் தூங்குகிறன்
ஏழைக்கு ஈயா உலோபிக்கும்
ஏனே சுத்தம் ஓதுகிறர்.

162 எல்லாம் அழியு மெனறறிந்து
எம்பெருமான் இளமையி லிருந்தே
ஏனே இவர்கள் வாழ்கின்றரென
இறைவனை வேண்டிக் கேட்டாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இருப்போர் நாளையில்லை 163
நாளை நிச்சய மில்லையடா
எல்லோரு மிதை உணர்ந்திட்டால்
எதையும் செய்யணும் இக்கணமே.

164 பெண்ணின் இளமை கழிகிறது
பொங்கிய தோற்றம் அழிகிறது
விதியை இறைவன் மாற்றிடுவான்
வீணே பிறரில் எரியாதே.

வைய மெல்லாம் அவனருளால் 165
வாழும் மனிதர்க் கேதுகுறை
கையை ஏந்திக் கேட்ப்போர்க்குக்
கருணை பொழிவான் அவனேதான்.

166 ஓட்டைப் பானை உடையுமடா
உள்ளே ஒன்று மில்லையடா
உதவா மனிதன் இறந்திட்டால்
ஒருவர் கதைப்பார் இல்லையடா.

தேடிக் கொண்ட செல்வமெலாம் 167
செத்தவுடன் கூட வாராதே
எப்படிச் சுரண்டி உழைத்தாலும்
ஏது பலனும் கிடைக்காதே.

168 வறுமையில் வாழும் மனிதர்க்கு
வாழ்வில் கலக்க மில்லாதாய்
வளமாய் வாழும் திட்டங்களை
வகுத்துச் சக்காத் தளிக்கணுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பான மனிதர்களாயிப் 169
பாருலகில் நாம் வாழப்
படைத்தவா உன் போதனைகளை
பதித்திடுவோம் எம் மிதயங்களில்.

170 ஹக்காய்[1] உழைத்திடுவோம்
ஹலாலா[2]ய் உண்டிடுவோம்
பண்பான குழந்தைகளை யுருவாக்கி
நல்ல குடிமக்க ளாக்கிடுவோம்.

பொருள் பெருகில் புகழோங்கும் 171
சமுகப் பொறுப்புக்களை
பொய் களவுக ளெதுவுமின்றி
கண்ணியமாய்ச் செய்திடுவோம்.

172 வாழ்க்கைக்கு உறுதுணையாய்
அமையும் தொழிற்கல்வி
ஊட்டி ஏழைக் குடும்பங்கட்கு
உதவி யவரை உயர்திடலாம்.

கடன் பட்டோர் நாணயமாய்க் 173
கடனை இறுத்துவிட்டால்
திடமாக நம்பிக்கை நாணயம் மிகவாகி
திரும்பவும் தர விருப்பம் தோன்றுமே.

1. ஹக்காய் = உண்மையாய்.
2. ஹலாலாய் = ஆகுமானதாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

174 கொடுத்த வாக்குறுதி
குலையாது தீர்த்திட்டால்
அடுத்தவர் நம்புவார்
அனைத்தும் நலமாமே.

நம் வாழ்க்கை யாத்திரையை 175
நம் வழியில் செலுத்தி
நன்மையுற வாழ்ந்தாலே
நாயனுக்குப் புகழாமே.

176 நம் செயல்க ளனைத்தும்
நன்மைக்காய் என்றே
என்று செய்து வாழ்ந்திட்டால்
அமைதியைக் காண்போமே.

நம்மைத் தழுவ அன்னை உண்டு 177
அன்பைப் பொழிந்திடத் தந்தையுண்டு
செம்மை நபி குழந்தையிலே
இருவரையும் இழந்த அனுதையராம்.

178 பாத்திமா நடந்த முறையிலெம்
மாதர் குலமும் பேணுதலாய்
என்ன குறையும் நேராது
திருந்திய சமூக மாக்கிடுவோம்.

பொன் பொருளுக்கோ ஆசையில்லை 179
பொறுமை தீய பேராசையில்லை
ஆட்களை ஆட்டிப் படைக்க எனும்
நாட்டமே இல்லாத நாயகமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

180 ஜன நாயக அத்தியாயத்தை ஆரம்பித்த
நபிகள் நாயகமே அந்த ஜனநாயக முறையில்
ஆட்சி நடாத்திக் காண்பித்துப்
பூரண ஜனநாயக வாதியாஞர்.

பெரு நிலத்தின் பேரரசாய்ப் 181
பிறந்துவந்த திருத்தூதர்
திக்கெட்டும் தீனேதும்
தீன்மறையை மொழிந்தனரே.

182 மது மயக்கத்தில் வாழ்ந்திருந்த
மனிதாபிமான மில்லாத அறபிகளை
மாண்புமிகு மனிதராக்க
மாநபி தியாகம் பல செய்தார்.

பல குற்றம் புரிந்தவன் நான் 183
பரிசுத்த ஞவதற்குப்
பாவங்களை நினைந்தழுது
மன்னிப்புக் கோருகிறேன்.

184 தானறிந்து செய்யும் தப்புகளுக்கெதிர்
வாதாட முடியா தென்றறிவீர்
தப்புகளைச் செய்வோரைத் திருத்திடென
இறைவனிடம் வேண்டி இறஞ்சுவோமே.

செய்திடும் காரியங்க ளெல்லாம் 185
இவ்வுலகுக்கு நன்மை பயப்பனவாய்
அமைவதாயின் அவர்கள் செயலால்
யாவரும் நன்மை யடைவாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

186 தன்னை அறிந்தவன் தானே
இறைவனை அறிந்தவ னாவான்
இறைவனை அறியாது ஏதும்
இயற்றிட எவராலும் முடியாதே.

பண்பான நோன்பிருக்க 187
பகலெலாம் பசித்திருந்து
பகலிரவாய்த் தொழுதிந்தப்
பாருலகை வென்றிடுவோம்.

188 வருட மொருமுறை திரளும்
மக்காவில் மனிதகுலம்
ஹஜ்ஜை நிறைவேற்றுதலால்
சகோதரத்துவம் தெளிவாம்,

சிந்திக்க எங்கள் சீமானும் 189
நபிபெருமான் நற்குணங்கள்
நல்லியல்புகளை நலமாய்க் கூறி
நன்மை அடைந்திட நாம் சிந்திப்போம்.

190 நம் நபிநாதர் வாழ்க்கைப் பாடம்
மனித வாழ்க்கைக்கு முன்மாதிரியாய்
நற் சீர்திருத்த செயலனைத்தும்
நானிலம் பேணின் நலமடையுமே.

மனுக் குலத்தின் மாணிக்கமாய் 191
மக்கா நகர் மீதுதித்து
மா நிலத்தில் ஒளி கொடுத்த
முத்தொளியாம் முஸ்தபாவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

192 நம் மிறைவ னருளாலே
நபிமணியை வாழ்த்துரைத்து
நற் சிந்தனைகளை நலமாய்
நினைவில் வைத்திடுவோம்.

நம்மவர் நலங் கருதி 193
நபியவர் நல்லுப தேசங்களை
நல்லெண்ணத் தோடறிந்து
நம்மிறையைப் புகழ்ந்திடுவோம்.

194 நபிமணியின் வாழ்த்துரைக்க
இனிய சிந்தனையை ஈந்தருளி
எமது கரம் இயங்க வைத்த
இறைவனுக்கு நன்றி சொல்வோம்.

படைத்தான் படைப்புகளில் 195
மானிடப் படைப்பை மேலாய்
பகுத்தறிவுப் பண்பாடாய்
பாரெல்லாம் வாழணுமே.

196 மதுவெறியின் மயக்கத்தில்
அன்று வாழ்ந்த அறபிகள்
பெண்குலக் கற்பினை யழித்து
வெறிகொண்டார் விபச்சாரத்தில்.

தாய் தந்தை தவறு செய்தால் 197
நாம் அவரை நொந்திடாது
மன்னிக்கும் மனத்தோடு
மறந்திடுவோம் தவறுகளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

198 சலாத்[1]தைப் பெருக்கிடுவோம்
சகோதரராய் வாழ்ந்திடுவோம்
சலாம் கூறக் கூசாது
சலாமத்து[2]ப் பெற்றிடுவோம்.

சிந்தனைக் கடலே 199
சீர்திருத்த வள்ளலே
அல்லாஹ்வின் தூதரே
அவன் ஈந்த அற்புதமே.

200 கல்லில் மண்ணில் கடவுளில்லை
வெறும் கப்ரில் ஏதும் தெய்வமில்லை
அவனை எதற்கும் நம்பிவிட்டால்
அருள்வான் கூலி அறிவீரே.

பெண் இனத்தின் தூய்மையான 201
கற்பைக் காக்கும் பெண்ணெவரும்
வாழ்க்கையின் ஒளி விளக்காமவள்
வழிகாட்டி ஒளி வீசிடுவாள்.

202 பெண்குலத்தின் பெருமை தரும்
நற் பண்புக ளெல்லாம் பொருந்தி
கைப்பிடித்த கணவன் விரும்ப அவன்
சொற் கேட்டணுகுவதே அழகாகும்.

1. சலாம் = சாந்தி கூறல்.
2. சலாமத்து = ஈடேற்றம் அடைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்குலத்தின் மணி விளக்காய் 203
கற்புக் கரசியராய் உலகில்
மங்காப் புகழ்தரும் கற்போடு
வாழணும் பெண்குலத் தரசிகளே.

204 கதீஜா நாயகி தான் கைபிடிக்கும்
நாயகத்திடம் வாணிபத்தை ஒப்படைத்து
உண்மையான தூதரென்ற நபியின்
அன்பைக் கவர்ந்து துணைவியானாரே.

பாத்திமா வழிவந்த பெண்குலமே யூர் 205
வம்பைக் கதைத் தருங் காலமதை
வீணாக்கி வீண்பேர் எடுத்திடாமல்
வளமான பொழுதாக்கக் கற்றிடுவாய்.

206 தேளுக்குக் கொடுக்கைக் கொடுத்தவனே
பாம்புக்குப் பல்லையும் படைத்துவிட்டான்
பெண்ணுக்கு நாணத்தைத் தந்துவிட்டான்
தன்னைப் பேணியே கற்பினைக் காப்பதற்கே.

பெண் கொள்ளக் கைக்கூலி கேட்டுவாங்கல் 207
பெரும்பாவம் என்பது தெரியலையோ
பெண் வாழக் கைகூலி இல்லாமலே விடும்
பெருமூச்சுக் காதிலே விழவில்லையோ.

208 நாட்டிலோர் குறையென்றால் ஆட்சியாளர்
நடத்திடும் நிர்வாகக் குறையென் போமே
வீட்டிலோர் குறையென்றால் தம்பதிகள்
வினைத்திட்ட நிர்வாகக் குறையறிவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டிலோர் குறையென்றால் படைத்தவரின் 209
பழுதான இலக்கணக் குறையென் போமே
வீட்டிலோர் குறையென்றால் வீணாய்ப் பெண்ணை
வெகுவாகத் திட்டுதல் ஏனோ சொல்வீர்.

210 தான் செய்யும் தப்புக ளெல்லாம்
தனக்கே நன்றாய்த் தெரிந்திருந்தும்
தானளிக்கும் தீர்ப்பை விட்டுத்
தப்பித்தல் முடியாத காரியமே.

பொதுநல சேவை செய்வோர் 211
புரிந்திடும் காரியத்திற்காய்
எதுவித லஞ்சம் வாங்கிடவும்
இசுலாத்தில் இடமே யில்லை.

212 கோணல் வழிகளில் உழைத் துழைத்துக்
குவித்த பணத்தை வைத்துண்டு
செலவு செய்து புகழ் பெற்றாலும்
இறையருள் ஏதும் கிடைக்காதே.

தான் பெரிதென்ற இறுமாப்பால் 213
தயாள உள்ளம் இல்லாதோர்
தாழ்வாய் எவரையும் கருதுபவர்
தாழ்வார் ஒருநாள் மண்ணறையுள்.

214 நெஞ்சில் வஞ்சகர் தம்முடனே
நேர்மையாக நாம் கதைத்தாலும்
வஞ்சகமாகக் கதை மாற்றி
வம்புகள் மூட்டி வைத்திடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரும் புகழும் பெறுவதற்காய் 215
பெரியோன் வணக்கம் புரிபவர்கள்
யாரும் செய்யும் அமல்[1] எதுவும்
நன்மை யளிக்க மாட்டாதே.

216 வார்த்தைகளை அள்ளிக் கொட்டிடுவார்
வாசால மாகக் கதைத்திடுவார்
வஞ்சகமான இருதயத்துட னவருடன்
வார்த்தை யாடுதலைத் தவிர்த்திடுவோம்.

சூதும் வாதும் கொண்டெவரும் 217
நிதமும் இறைவனைத் தொழுதாலும்
சூதும் வாதும் இவனைக் கொண்டு
எரியும் நரகில் சேர்த்திடுமே.

218 ஒற்றுக் கேட்டால், உளவறிந்தால்
சற்றும் பொறான் இறைவனென்றால்
உண்மைக் குண்மையாய் வாழ்ந்து
நற் குணத்தினராய்த் திகழ்வீரே.

கல்லில் மண்ணில் கடவுளில்லை 219
கட்டிடத்தினில் தெய்வமில்லை
தொழுவோ ரெல்லாம் ஒன்றுகூடி
துதிப்போம் இறைவனைக் கையேந்தி.

1. அமல் = செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

220 தானோர் தனவந்தனாய் இருந்து
தன் சொந்தப் பணத்தைக் கொண்டு
அமைக்கும் கல்விக் கூடத்துக்கு
தன்பெயரை வைத்தழைத்தல் தகுதியாமோ.

குடும்பத்தில் குழப்பம் வரும்போதும் 221
அவற்றை நிரந்தர மாக்காது
கோபத்தை நெஞ்சில் வைத்ததனைப்
பாராட்ட இஸ்லாம் அனுமதிக்காதே.

222 நேர்மை தவறுக் கொள்கையாளுல்
தோல்வியிலும் நேர்மை வேண்டும்
நேர்மை தவறி வெற்றி கொள்ளுதலை
நியாயமென்று கொள்வதில்லை.

பள்ளி வாயல்களைப் பராபரிப்போர் 223
பரிசுத்த மானவர்களாம் அவர்கள்
பல்லுக் குத்தும் துரும்பை யேனும்
பள்ளிச் சொத்தில் எடுத்திடலாகாதே.

224 கலீபா[1] உமர்ரலி யவரோ பொதுக்கணக்கு
பார்த்திருக்கும் போதோர் நண்பர் அவரைக்
கண்டுகதைக்க வந்தபோது கலீபா அவர்கள்
பொதுவிளக்கை யணைத்துத் தன்விளக்கேற்றினாரே.

1. கலீபா = மக்கள் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடன் தனிப்பட்ட முறையாய் 225
கண்டு கதைக்க வந்த நண்பருடன்
பொது லாம்பை வைத்தெரிக்காது
தன் லாம்பை எரித்துக் கதைத்தாரே.

226 அனேக பராபரிப்போர் எங்கும்
பரிசுத்த மாயிராது பள்ளிச்
சொத்தில் சுரண்டி வாழ்வோர்
ஒருபோதுமே உருப்படாரே.

பள்ளி வருவாயை வீணாக்கி 227
குதர்க்கம் பேசும் கூட்டத்தார் போல்
கோட்டு வழக்குகளில் செலவிடுதலை
கேட்டிடுவா னிறைவன் மறுமையிலே.

228 பள்ளிச் சொத்தைப் பராபரிக்க
நம்பிக்கை யாளர்களை வைப்பதானால்
தொழும் ஜமாத்[1]தார் ஒன்றுகூடி
தேர்ந்தெடுப்பதே முறையாகும்.

சமூக அறியாமை ஓடச்செய்வோம் 229
மூடச் செயல்களை மறுத்திடுவோம்
தூய நபியினது போதனைகளை
அவர்கள் அறிய எடுத்துரைப்போம்.

1. ஜமாத்தார் — கூட்டுச் சேர்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

230 வறுமையில் வாழும் குடும்பங்கட்கு
வாரி வழங்கி அன்னவரை
மதிப்புள்ள மக்க ளாக்கிவிட்டால்
இறைவ னென்றும் அருள்புரிவான்.

கதியற்ற குழந்தைகளில் இரக்கங்கொண்டு 231
அவர் நல்லெதிர்கால முள்ளவர்களாய்
அமைந்திட உதவிகளைச் செய்துவிட்டால்
இறைவ னென்றும் அருள்புரிவான்.

232 தயாள உள்ளம் இல்லாத் தனவந்தர்
தான்மட்டும் சிறந்து வாழ்ந்திட்டால்
இறைவன் கணக்குக் கேட்கும்போது
என்ன சொல்வார் அத்தனவந்தரே.

சிந்தனையில் தோன்றியதை 233
சீராக எடுத்துரைத்து
சிந்தனை யாளர்முன்னே
சிந்திக்க வைத்திடுவோம்.

234 நாகரீகப் பெயரை வைத்து
நானிலத்தில் சீர் அழிந்து
நரக வாழ்வை நோக்குவோரை
நாயனே காத்திடட்டும்.

ஏச்சுப் பேச்சு இழிமொழிகள் 235
ஏற்றுத் தாங்கினர் எங்கள்நபி
பேச்சும் செயலும் ஒன்றிணைந்து
எவரும் போற்ற வாழ்ந்தனரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

236 கானும் கடலும் கதிர் மலையும்
வானும் நிலமும் அவன் பொருளே
பயிரும் உயிரும் படைத்தவனே நல்
ஞானம் தந்து காக்கின்றான்.

யாதும் அவனுக் கிணையில்லை 237
யாவரும் அவனை துதிக்கின்றார்
யாரும் துணையில் லாதவனாய்
தனியே அருளைப் பொழிகின்றான்.

238 புனித நோன்பு இருபத்தேழில்
புனித 'லைலத்துல்கதிர்'[1] இரவில்
பாவ மன்னிப்பைக் கோரி நாம்
இறைவனை மனங்குளிரக் கேட்டிடுவோம்.

நானென்ற தற்பெருமையை விட்டிடு 239
நாமென்ற நல்லெண்ணத்தை ஏற்றிடு
நா மொற்றுமையாய் ஒன்றுபட்டால்
நாடு சிறக்க வாழ்வோமே.

240 நம்பிக்கையாய் நாம் வாழ்ந்தால்
நானிலம் போற்ற வாழ்ந்திடுவோம்
நல்லோர் தங்கள் உள்ளமெலாம்
நம்பும் படியாய் வாழ்வுறுவோம்.

---

1. லைலத்துல் கதிர் = ரம்ழான் மாதத்தின் 27ம் தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தப்லீக்'[1] இயக்கத்தில் ஈடுபடுவோர் 241
தலைவனை வணங்கி அவன் கட்டளைகளை
பாக்கி யின்றிச் செய்துகொண்டே
இவ்வியக்கத்தில் ஈடுபட விதியாகுமே.

242 ஊழியஞ் செய்பவர் கூலியை
வியர்வை உலரமுன் கொடுத்தலை
உணர்த்திட்ட நம் நாயகமோ
உழைப்போரின் நலத்தைக் காத்தனரே.

கணவனிழந்த பெண்மணிக்கு 243
'இத்தாக்'[2] கடமையை வாஜிபாக்கினன்
இறந்த கணவனுக்காய் துக்கம் அனுட்டித்து
இத்தாக் கடமையை முடித்திடுவாள்.

244 ஜனநாயக வாதி நம்பெருமானார்
தன் மறைவுக்கு முன்னமே தனக்கு
அடுத்த கலீபா யாரென்று குறித்து
எதுவும் சொல்லி வைத்திடவில்லையே.

நபி நாயகத்தின் தலைமையிலே 245
ஜனநாயக ஆட்சியை நிறுவினரே
அன்னவர் வபாத்[3]தின் பின் அடுத்த
கலீபாவை மக்களே தேர்ந்தார்கள்.

---

1. தப்லீக் = எத்திவைத்தல்.
2. இத்தா = கணவன் மரணித்தபின்
மனைவி துக்கம் அனுட்டித்தல்.
3. வபாத்து = மரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

246 கடமையைச் செய்திடு மனிதா நீ
கண்ணியமாய் வாழ் சனத்தோடு
தேசப் பற்றில்லாவிட்டால்
வாழ்வதில் அர்த்தமே யில்லையடா.

நாயகத்தின் வழிமுறையாய் 247
வளர்ந்துவந்த ஜனநாயகமே
இடைக்காலச் சந்தர்ப்பத்தால்
முடி ஆட்சியாய் மாறியதே.

248 நம் மிறைவன் போதனைகளை
நலமாய் நன்குணர்ந்து
நம்மிறைவன் குறித்தபடி
நாள்தோறும் வாழணுமே.

சுன்னத்தை[1]ப் பேண தாடி வளர்த்திடுவார் 249
சமுதாய நேர்வழியும் காட்டிடுவார்
திருமணப் பேச்சுவார்த்தைகளில் கலந்து
சீதனத்தையும் பேசித் தீர்த்திடுவார்.

250 பாலர் வயதிருந்தும் பயனுறும் கல்விதனை
கற்க விடாது கலக்கம் அடைந்துவிட
செய்ததுக்காய் அவ்விடத்துச் சீமான்களை
கேட்டிடுவா னிறைவன் கேள்வி கணக்கினையே.

---

1. சுன்னத்தை — நபிகள் நாயகத்தின் நடைமுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனற்றுத் திரியும் வாலிபர்கள் மற்றவர்க்குத் 251
துன்புறுஞ் செயல்கள் செய்து நிதம் அடுத்துள்ள
மக்களைத் துயரப் படுத்துபவர் தங்களை
திருத்து வது சமூகத்தின் கடமை யறிவோமே.

252 ஓ ரிடத்திற் குடியிருக்கும் உயர்ந்த தனவான்கள்
உள்ளம் திரும்பி உற்ற பொருட் தியாகஞ்செய்து
பொதுநல சேவைகளைச் செய்து வரின்
இறைவன் தரப் பெற்றிடுவார் தவாபு[1]களை.

வறுமைக் குடும்பங்களுக்கா யிரங்கி 253
தியாகங்களைச் செல்வந்தர் செய்வதானல்
இறையோன் மகிழ்ந்து அருள் புரிவான்
என்றும் வறுமை அணுகாதே.

254 தொழுதலைப் போன்றே வழங்குதலும்
கட்டாயக் கடமை யறிவீர்
செம்மை யுற வழங்குவதால்
செல்வம் அழுக்ககன்று தூய்மை யுறுமே.

மனிதருக்குக் கொடுத்த வாக்குறுதியை 255
நம்பிக்கையாய் நிறை வேற்றுதலே
நல்ல முஸ்லிமுக்கு விதியாத லால்
தவறுதவரே நம்பிக்கை யாளராம்.

---

1. தவாபு = நல்ல பயன் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

256 பாலர் களெல்லாம் படித்தவர்களாய்
சமூகத்தின் நலமான அங்க மாகி
நற் காரியங்களைச் செய்து வந்தால்
நன் மதிப்போடு வாழ்ந்திடுவாரே.

குலுங்கக் குலுங்கச் சிரித்திடு பாப்பா 257
படித்துப் படித்துப் பயனுறு பாப்பா
யாருக்கும் தீங்கிழையாமலே பாப்பா
பாடிப்பாடி விளை யாடு பாப்பா.

258 செல்வந்தன் மகளான கதீஜாவின்
சீரிய வாணிபப் பொருள் பெற்று
நேர்மை வாணிபம் செய்தவரின்
தூய அன்பினைப் பெற்றாரே.

ஐவேளைத் தொழுகை யினில் 259
அமல்[1] செய்வோ ரெல்லாம்
அவ்வப் போது தொழுகை யினில்
அவரவர் கலிமாவைப் புதுப் பிக்கின்றனர்.

260 நாகரிகம் என்று சொல்லி
நாளுக் கொரு உடை யுடுத்து
வழி பவனி வந்து வந்து
பெண் ணுலகம் அழிகிறதே.

---

1. அமல் = செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தில் ஆசை கொண் டோர் 261
பணத்தைப் பெருக்கிட ஆசையாவார்
ஈமானில்[1] ஆசை கொண்டோர்கள்
ஈந் துண்டு வாழ்வார்கள்.

262 ஒரு குடும்பத்தில் சேர்ந் தோரில்
ஒருவர் தீங்கு செய்து விட்டால்
திங்கினரைத் தள்ளி விடாமல்
திருத்திப் புனிதர் ஆக்கிடுவோம்.

பள்ளிப் படிப்பை அறியாதவனும் 263
பண்பான குண நலத்தால்
நானிலத்திற் நற்பேர் கேட்டு
நல்லறி வோடு வாழ்ந்திடுவான்,

264 பெண்ணின் பிழை கேட்டினிலே
பொல்லாத குழப்பங்கள் நடந்திடுமே
குணமான பெண்ணை வளர்ந்து
குடும்பத் தலைவி யாக்கிடுவோம்.

நாணமுள்ள பெண்ணுகை நாவினைக் காத்துக்
கொண்டால் 265
நானிலத்தில் நஷ்டங்கள் ஏற்படாது
நாகாக்காத பெண்களாலே தான்
நாயகர் கோடுகளில் ஏறிடுகிறுர்.

1. ஈமான் = நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

266 கற்றுணர்ந்த அறிவு தன்னால்
கால மெல்லாம் வழி நடந்தால்
கருணையான உறவோடு
காலம் வரை வாழ்ந்திடுவோம்

பூவிலும் மெல்லிய தாய் 278
பெண்ணுடம்பு இருப்பதனால்
பூப்போலப் பெண்ணை எண்ணிப்
பூ லோகத்தில் பூக்க வைப்போம்.

268 பூ கசங்கினால் வாடைதரா
பெண் அழுதால் அன்பைத் தராள்
பூவின் அழகில் மகிழ்வதானால்
பெண்ணையும் அன்பாய் அரவணைப்போம்

வண்ணமலர் அழகு கொழிக்க 269
வண்டுகள் ரீங் காரம் பாட
பெண்ணுலகை வட்ட மிட
புது இளைஞர் தோன்று ராரே.

270 பூத்துக் காய்த்துப் பொழிவுறும்
வசந்த காலம் பிறந்து விட்டால்
வாட்டம் அகன்று மக்கள் மகிழ்ந்து
வாழ்வு செழிக்கும் தாயகத்தில்.

சீனு சென்றாயினும் சீர் கல்வியைப் பெற்றுக்
கொள் 271
என்றெங்களது திருத்தூதார் சொல்லியதை
கற்பித்தலைக் கண்ணியமான சேவை யென்றே
கடைப்பிடிப்போம் கல்விக் கூடங்களில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

272 படிப்பிக்கும் நேரத்தைப் பாழாக்குவோ ரெல்லாம்
தர்மம் என்ற கடமையில் தவறியவரா யாயிடுவார்
என்றுநாம் ஏற்றுவிட்டால் எப்பொழுதும்
போகும் நேரத்தைப் பொய்யுரையாது
மெய்யுரைப்போம்.

எங்களது இளம் சமூகத்தினரை ஒளிமயமாக்க 273
பாட நேரங்களை யாரும் பாழாக் கிடாது
தேசத்தின் திறமை மிக்க சமூகத்துடன்
வாழவைக்கத்
திறமைமிக்க ஆசிரியர்களாய் நாம் திகழ்வோம்

274 செய்வோர் மிக விருந்தும் சொல்வோர் ஒருவரே
சொல்பவர் திறமையிற் தான் செய்வார் தம்
கடமைகளை
சொல்பவர் திறமை யற்றிருப்பின்; செய்வோரில்
சிலர் சோர்ந்து போய்க் கடமையில் தவறிடுவார்.

எங்களது, இந்த ஊர் இளம் சிறுர்களுக்கு 275
'சுன்னத்'[1] செய்வதற்குச் செலவுகளைச் செய்யாது
பாடசாலை ஒன்றில் சோடித்துச் 'சுன்னத்தை'
அரசாங்க 'டாக்டரால்' செய்திடக் கேட்டிடுவோம்.

276 அறபுப் பாஷையைக் கற்கும் ஆரம்பமாய்
பாலர் வகுப்பிலிருந்து அப்பாஷையை வாசிக்க
பாடசாலைகளில் அரசின் கடமையென ஏற்றிட்டால்
பெற்றேரின் பெருஞ் செலவைக் குறைத்திடலாம்.

---

1. சுன்னத் = கத்தனு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ மறையாம் திருக்குர்ஆனை அர்த்தம்
விளங்கி 277
அர்த்தத்துடன் கற்றுக் கொள்வதையே யெங்கள்
மாநபி மொழிந்தது போல்; தெரிந்து கற்பவர்களும்
கற்பிப்பாரும் மனிதருள் மேலானவ ரென்று
ரைத்தார்.

278 தரணியின் எல்லை எங்கும்
அல்லாஹ்வின் அரும் பெரிய
வல்ல புகழ் இஸ்லாம்
பரந் தழியும் இப்புவியே

என்னைப் படைத்தோன் அல்லாஹ்வே 279
எல்லோரையும் படைத்துக் காப்பவனே
அல்லாஹ் ஆணை இல்லாமல்
அணுவு மசையா துலகினிலே;

280 எல்லாந் தருவோன் அல்லாஹ்வென்றே
ஈமான் கொண்டு துதிக்கின்றோம்
முன்னை மூன்று நபிபோதும் பின்பு
மா நபி பிறந்தார் இகலோக நபியாக.

மார்க்கம் பேசிடுவார் 281
மற்றவரைத் திருத்திடுவார்
சீதனத்தைத வாங்கிக் கொண்டு
திருமணமும் செய்திடுவார்.

282 சீதனம் வாங்கியவன் தனக்கு
மண மாகிடும் மங்கையின் சொல் பணிந்து
அவளது வேலைகளைச் செய்திடும்
அரிய சேவகனு யிருந்திடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குறுதிகளைக் கொடுத்து மகளின் 283
கல்யாணத்தை முடித்து விட்டு
வாக்களித்ததைக் கொடுக்க மறுத்தால்
விலகிடுவான் காதிக் கோட்டில்

284 கொடிதன் பாரத்தைத் தளர்த்து வது போல்
பெற்றோரும் பொறுப்பை தளர்த்திக்கொள்ள
முடியாத வாக்குறுதிகளை கொடுத்து விட்டு
மங்கையரின் வாழ்வை நாச மாக்கினரே.

சமுதாயத்தைச் சீர் கெடுக்கும் கொடிய 285
சீதனச் சம்பிரதாயத்தை இப்
புவியைவிட் டகற்றி விட்டால்
பெண்களது வாழ்வு மலர்ந்திடுமே.

286 எடுத்திடும் பெண்ணுக்கு உழைத்துப் போட
அவளிடம் கைக்கூலி சீதனம் பெற்று
திருமணம் செய்து கொள்தல் ஆண்கட்கோ
பெரும் அவமான மெனக் கருது அறிலேயே

வாழ்வகை ஏது மில்லாத அபலைப் 287
பெண்கட்கு வாழ் வளிக்க விரும்பும்
ஆண்களோ மகறைக் கொடுத்து அவளுடன்
மணமாகுதலே மார்க்கம் கூறிய விதியாகும்.

288 சீதனம் கைக்கூலி கொடுத்தல்
இஸ்லாமிய சம்பிரதாய மில்லை யென்றால்
முஸ்லிம்கள் வாழும் இத்தீவில்
எவ்வகையாய்ச் சீதனம் இடம் கொண்டதுவோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனக் கொடுமைகளால் கலங்கிப் 289
பெரு மூச்சிடும் பெண்ணினத்தாரின்
பரிதாப நிலையை அறிவுள்ள ஆண் மக்கள்
உணர்ந்திட்டால் உலகம் மலர்ந்திடுமே.

290 சீதனத்தை விரட்டி யடிக்க நம்
பெண் ணெவரும் உழைத்திடும் வகையாய்
கல்வியைக் கற்றும் கைத்தொழிலாவது
செய்திட்டால் வாழ்வு பிறந்திடுமே.

வசதியான பெற்றோர்கள் தம் 291
மக்களுக்கோ வாழ் வளிக்கும் போது
காணிபூமி கல்வீடு கா செல்லாம்
கொடுத்துத வுதலில் தவறில்லையே.

292 சீதனந்தான் கட்டாய மென்றே
பின் பற்றிடும் சம்பிரதாயத்தை
நம் மினத்தவரின் மத்தியிலிருந்து
தூர விரட்டி அடித்திடுவோம்

பெண்ணின் மனம் பூப்போ லென்று
கொண்டால் 293
பெற்றோர் கல்யாணத்தைப் பேசிய பின்பு
அவளோ ஆயிரம் கற்பனைக்கு அடிமையாகி
அவனை மறந்திட முடியாத நிலையாகிடுமே.

294 கல்வியை நன்றாய்க் கற்றவரும்
இம்மாதிரியாய் நடந்திடுவ தாலே;
கூடுதலாய்க் கொடுக்க வசதி யற்றோரின்
நிலையை உணர்ந்து நடக்க யாருமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாதிரியான நிலை யொன்று அவரின் 295
சகோதரிக்கே ஏற்படுமாயின்; அவரோ
தனக்கொரு மனைவியை மகளைக் கொடுத்து
மணமுடிக்க யாரும் முன் வருவதில்லையே.

296 பெரியோர்கள் ஒன்று கூடிச் சீதனத்தைப் பேசி
கல்யாணத்தை முடிவு கட்டிய பின்பும்
பெரிய சீதனம் இன்னோரிடத்தில் கிடைக்குமெனில்
கொடுத்த வாக்குறுதியை ரத்தாக்கிடுறாரே

மைந்தனைப் பெற்று வளர்த்து 297
மதிப்பான பிரஜை யாக்கி விட்டு
மாப்பிள்ளைச் சந்தையிலே லஞ்சம்
வாங்க முனைந்திடுகிறார் பாவம்.

288 சீதனமுமில்லை சிறந்த வீடுமில்லை
காசும் இல்லை கல்மதில் தானு மில்லை
உன் மைந்தனுக் குகந்த வளைத்தான்
உதவ வந்தோம் என்பாரை எவரும் ஏற்காரே

மேலிடத்தின் செய்தி யொன்று 299
மாப்பிள்ளை கேட்டுப் போனோரிடம்
சீதனப் பட்டியலுக்கு முடியாத தாய்
திரும்பிப் போனார் வட்டாவுடனே.

300 வரலாறு கூறிப் பெருமை அடையாது
வாழும் உலகில் வள்ளல் பெருமானார்
வாழ்க்கையே நமது குறிக் கோளாய்
வரலாற்றுப் படி வாழ்வை யமைக்கணுமே. ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு வயதானுல் ஏவும் இளையாரை
நாளும் தொழுமாறு நாயகனை - ஏழின்மேல்
பத்தா யினுந்தொழுகை பற்ரு திருப்பாரேல்
பத்தா அடித்தும் பழக்கு

— புலவர்மணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைக்கு பேரான
'லங்கா ஜெம்ஸ்'ஸை நம்பி வாரும்;
உயர்ந்த பெறுமதியைப் பெற்று
உள்ளம் குளிரச் சென்றிடுவீரே !
பதுளை 'றேஸ்கோஸ்' முன்னிருக்கும்
'லங்கா ஜெம்ஸ்'ஸிக்கு
மாணிக்கங்களைக் கொடுத்து
மதிப்பு மிகு விலை பெறுங்களே !

Dealers in: Precious and Semi Precious stones.

LANKA GEMS
40, Race Course Road,
BADULLA.
SRI LANKA.

Tel: 386.

**முபாறக் ஹாஜியார்** முகம் மலர
வரவேற்றுத் தான் செய்யும்
அருஞ்சேவை தனை அல்லாஹ்
அன்புடனேற்று அருள் பகர்வான்

பசறை.

துணி வகை திறமைக்கு
சென்று வாரும் 'ஸபாயா'ஸை'
ஒருதரம் சென்றவர்கள்
ஒரு போது மறக்க மாட்டார்

**'ஸபாயாஸ்'**
இல. 137, லோவர் வீதி, பதுளை.

NEVER FORGET TO VISIT THE EXPERT
**LANKA CHEMISTS**
No. 7, Dharmadutha Road,
BADULLA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறைத் தாயகத்தின்
சரித்திரம் கூறி நிற்கும்
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் செய்யும்
சேவைதனை யாம் உணர்ந்திடுவோம்;
மரம், விறகுவாங்க வெகு தூரம் செல்லாதீர்
இரும்பு, சீமேந்து எங்கள் எல்லாத் தேவைக்கும்

**சம்மாந்துறைப்பற்று**
**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

என்றும் பெருஞ்சேவையால் பயனடைவோம்.

தொலைபேசி: 067 – 2271. தந்தி: 'செந்நெல்'

---

சம்மாந்துறையில் ஸ்தாபகமாக
'சம் சம் றவல்ஸ்' ஸ்தாபனத்தை நம்பி
ஆண்டு தோறும் ஹஜ்ஜை பூர்த்தி செய்ய
அனைவரும் 'சம் சம் றவல்ஸ் ஏஜன்ஸை' நாடிவரின்;
ஹஜ்ஜை நிறைவேற்ற அங்கு சென்று ஆன
கஷ்டங்களை அனுபவிக் காத வண்ணம்
**சம் சம் றவல்ஸ் ஏஜன்ஸி** மூலம் சென்றாலே
சகலதையும் நிறைவு செய்து சந்தோஷமாய் வருவீரே.

**ZAM ZAM TRAVELS**
**SAMMANTHURAI-3.**

---

பசார் வீதியிலிருக்கும் 'சமீம் ஸ்டோர்ஸ்' செல்வீரே
மருந்துவகை, பூட்டுவகை, விதம்விதமான
மின்சாரத் தேவைக்கும்,
பைசிக்கிள் உதிரிப்பாகம் மற்றும்
நவீன நாளாந்த வீட்டுத்தேவைக்கும்
சகாய விலையில் வாங்கிடவே விரையுங்கள்

**சமீம் ஸ்டோர்ஸ்**
64, பசார் வீதி, சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஜெம்சைன்ஸ் என்றபிரைஸஸ்'
துணிவகை, அன்பளிப்புத் தேவைக்கும்
மாணிக்க வியாபாரத்துக்கும் மறவாதீர்
ஜெம்சைன்ஸ் என்றபிறைஸ்ஸஸ்

**Gemshine Enterprizes**
78, Bazaar Streets, SAMMANTHURAI.

சாய்ப்புச் சாமான், பித்தளை அலுமினியப் பாத்திரம்
அலங்காரப் பொருட்களைச் சகாயமாய்
மொத்தமாகவும் சில்லறையிலும் வாங்க
சகலரும் சமூகமளிப்பீர் 'பஸீல் ஸ்டோர்ஸ்ஸை'

பஸீல்ஸ் ஸ்டோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, சம்மாந்துறை.

பசார் வீதியில் மாண்பு மிகு
'எம். ஆர். அன் சன்ஸ்ஸில்'
தேவையான டிசைன்களில்
தேடிவாங்க மறவாதீர்

**M. A. ASHARAFFALI**
Bazaar Streets, SAMMANTHURAI.

'சன்யோ சென்ற'ரில் உங்களுக்குத்
தேவையான ரேடியோ, கைக்கடிகாரம்
சகல மணிக்கூடுகள் மற்றும்
அலங்காரத் தேவைகளுக்கும் மறவாதீர்
சனியோ சென்றறை

**SANYO CENTRE**
41 - A, FRONT STREET,
COLOMBO - 11 Phone: 26657

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்து இசைக்குயிலின்
இசையினில் மெய் மறந்து
இருப்பீர் கருத்துணர்வீர்
இலைமறை காயாய் இருந்தவளை
இசைக்க வைத்தான் இறையவனே
இன்இசையின் இனிமையிலே
எழில் மயிலும் நடனமாடும்
ஆடும் தென்றல் காற்றதனின்
அழகிய இசைகள் காதுகளில்
அழியாத ஞாபகத்தை நினைவுகூரும்.

---

அடுத்த வெளியீடு

★ **கவிக் கதம்பம்**

★ **இவன் சிந்தனை** — எம். ஐ. மீராலெவ்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் யாரென்று நாடறிய
நானுரைக்கும் அறிமுகத்தில்
சிந்தனையில் ஊற்றெடுக்கும்
சீர்திருத்தக் கருப்பொருளை
சிந்திப்போர் முன்னுரைத்து
சிறந்த எதிர் காலமொன்றை
தோற்றிவைக்கும் ஆசையெனும்
அபிலாஷை கொண்டதனை
அறிவீர் என் கருத்துகளை
அறிந்தபின் யாரென
அகிலம் அறிந்தென்றும்
அறிமுகமாய் நானிருப்பேன்.

கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org